7. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

13. தங்க ஆபரணங்கள் ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் நிரப்புதல் திட்டத்தின்கீழ் தகுதியான ஏற்றுமதியாளர்களுக்கு பாரத் ஸ்டேட் வங்கியினால் விற்கப்பெறும் தங்கத்திற்கு விற்பனை வரியிலிருந்து முன் தேதியிட்டு விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 27—11—1990 ஆம் நாளிட்ட 677 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5)-பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

14. சென்னை சதர்ன் ஸ்டக்சுரல் நிறுவனத்தால் தயாரிக்கப் பெறும் சில கருவிகளுக்கு மூன்று ஆண்டு காலத்திற்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக் கட்டளைகள் துறையின் 30—11—1990 ஆம் நாளிட்ட 388 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

15. சென்னை, திருவாளர்கள் தாமரை என்ற நிறுவனத்திற்கு மருத்துவமனை கருவிகள் வழங்குவதற்கு விற்பனை வரி விதிப் பிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 30—11—1990 ஆம் நாளிட்ட 693 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத் தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

16. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு, இந்தியாவில் தயாரிக்கப் படும் அயல் நாட்டு சாராவிகள் (தயாரிப்பு)விதிகளில் சில திருத் தங்கள் செய்தமை குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 21—11—1990 ஆம் நாளிட்ட 996 ஆம்

எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

17. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு வடிப்பாலை விதிகளில் சில திருத்தங்கள் செய்தமை குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 9—10—1990 ஆம் நாளிட்ட 931 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

ஏதுமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS